ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

மலர் : 7
இதழ் : 1
நவம்பர் – 2010

செய்திமலர்



# கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள்

லூக்கா 3 : 3

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

சுதேச ஊழியர் சாட்சி

# சகோ.சோமா L. புரியா

குஜராத்



எனது பெயர் **சோமாபாய் புரியா** நான் குஜராத் மாநிலத்திலுள்ள, உச்வானியா கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. இயேசு கிறிஸ்துவைப் பற்றி அறியாமல், பாவத்திலும், சாபத்திலும், வியாதியிலும், சாராயம் குடிப்பதிலும், சண்டை போடுவதிலும் எனது வாழ்க்கை போய்க் கொண்டிருந்தது.

நான் சமாதானமற்று வாழ்ந்து வந்த இந்த வேளையில் எனது கிராமத்தைச் சேர்ந்த **சகோ. சுசுடாபாய்** என்ற விசுவாசி மத்தியப்பிரதேசம் மாநிலத்திலுள்ள வாவடி என்றகிராமத்தில் ஊழியம் செய்து வரும் **சகோ. நார்சிங் பபேரியா** அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர் என்னை ஆலயத்திற்கு அழைத்தார். நான் அவருடன் ஆலயத்திற்குச் சென்றேன். சகோதரர் எனக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றியும், அவரது அன்பினையும், மேலும் வேதத்தின் சத்தியங்களையும் நன்கு போதித்தார். அப்பொழுது நான் பாவ உணர்வடைந்து அழுது ஜெபித்து எனது பாவங்களை அறிக்கையிட்டேன். அந்த நேரத்தில் தேவன் என்னைத் தொட்டு எனது பாவங்கள், சாபங்கள், வியாதிகள் அனைத்தையும் என்னை விட்டு நீக்கினார். எனது உள்ளத்தில் தெய்வீக சமாதானம் நிரம்பிற்று.

அதன்பின் 2006ம் வருடத்தில், தேவன் என்னை இரண்டு முறைதன் தூதர்களோடு தரிசனம் தந்து ஊழியத்திற்கு அழைத்தார். தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து குறுகிய கால வேதாகம கல்வியைக் கற்று, தேவனால் அபிஷேகிக்கப்பட்டு, 2007ம் ஆண்டு முதல் தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறேன். என் மூலம் எனது குடும்பத்திலுள்ளவர்களும் தேவனை ஏற்றுக் கொண்டார்கள். தற்போது எனது சொந்த கிராமத்தில் எனது வீட்டில் சுமார் 20க்கும் அதிகமான குடும்பங்களுடன் தேவனுடைய ஆராதனையை நடத்தி வருகிறேன். எனக்கு சமாதானம் தந்து என்னை இரட்சித்த இயேசு கிறிஸ்து எங்கள் கிராமத்திலுள்ள அனைவரையும் சந்திக்க வேண்டும் என்பதே எனது வாஞ்சை. தொடர்ந்து எனக்காகவும், எனது ஊழியத்திற்காகவும், எனது குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். மேலும் எனது கிராமத்தின் அருகிலுள்ள கிராமங்களில் ஊழியங்களை ஆரம்பிக்கவும், இந்த ஆண்டிற்குள் 5 சுதேச ஊழியர்களை எழுப்பவும், பக்கத்துக் கிராமங்களில் சபைகளை ஸ்தாபிக்கவும் தேவன் எனக்கு வாஞ்சையைத் தந்துள்ளார், இந்த வாஞ்சை நிறைவேற தொடர்ந்து ஜெபியுங்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **All Saint's Church,** Madurai.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை குஜராத் பணித்தளத்திலிருந்து உங்களுக்குத் தெரிவிக்கிறேன். தேவ கிருபையால் இந்த 2010ம் ஆண்டில் 10 மாதங்களைக் கடந்து புதிய மாதமான நவம்பர் மாதத்தை தேவன் காணச் செய்த கிருபைக்காக அவரைத் துதிக்கிறேன்.

கடந்த அக்டோபர் மாதம் முழுவதும் ஊழியப் பாதையில் தேவன் அற்புதமாக நடத்தி எங்கள் யாவரையும் அவருடைய நாம மகிமைக்காகப் பயன்படுத்தினார். குறிப்பாக 3,17,24 ஆகிய மூன்று ஞாயிற்றுக்கிழமைகளிலும் ***"ஷாலோம் மிஷன் ஞாயிறு"*** ஆசரிக்கவும், அதைத் தொடர்ந்து 4,18,25 ஆகிய மூன்று தினங்களிலும் ஊழியர் கூடுகைகளையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். அனைத்து விசுவாசிகளும் மிக உற்சாகமாக காணிக்கைகளைப் படைத்தார்கள். நானும் எனது மனைவி வஹிதாவும் சென்று சபைகளை உற்சாகப்படுத்தி, பெலப்படுத்தி வர தேவன் கிருபை செய்தார்.

**02.10.2010** அன்று தூத்துக்குடியில் பவர் IPC சபை மூலமாக நடத்தப்பட்ட பெண்கள் எழுப்புதல் கூட்டத்தில் எனது மனைவி சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார். அநேக பெண்களும், அநேக சபை போதகர்களின் மனைவிமார்களும் பங்கேற்று ஆசீர்வாதம் பெற்றார்கள்.

அக்டோபர் 9 & 10 ஆகிய நாட்களில் அறுமுகநேரியில் **"மகிமையின் இயேசு மாறாதவர்"** ஊழியங்களின் சார்பில் **சகோ. கிறிஸ்டின் கெனிஸ்டன்** அவர்கள் ஒழுங்கு செய்திருந்த "குடும்பங்கள் இயேசுவுக்கே" என்ற தலைப்பில் நடைபெற்ற சிறப்பு குடும்ப முகாமில் நானும் எனது மனைவியும் செய்தியளிக்க தேவன் கிருபை தந்தார். கூட்டம் நடைபெற்ற பேரிஸ் ஹால் நிரம்பி வழிந்தது, அநேக தேவ பிள்ளைகள் கலந்துகொண்டு, கண்ணீருடன் தேவ வார்த்தைக்குச் செவிசாய்த்து, பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெற்றனர். மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்கள் மூலமாக 10 பீல் ஆதிவாசி சிறுவர்கள் தாங்கப்பட்டு வந்தார்கள். மேலும் 5 சிறுவர்கள் இந்த கூடுகையிலிருந்து தாங்கப்படுகின்றனர். கர்த்தர்தாமே ஊழியங்களையும், தேவனுக்கே மகிமை உண்டவதாக.

தேவகிருபையால் அக்டோபர் 11–15 வரை 5 நாட்கள் "ஆரம்ப சுகாதார பயிற்சி" முகாம் 63 ஊழியர்களுக்கு வெகு சிறப்பாக நடத்தவும், தாகோத் மற்றும் ஜாலோத்தில் **இலவச மருத்துவ முகாம்களை** நடத்தவும் தேவன் கிருபை தந்தார். Dr.Abel அவர்கள் குழுவாக வந்து நேர்த்தியாக நடத்தி தந்தார்கள்.

மார்த்தாண்டத்திலிருந்து (K.K. Dist) A.G சபை போதகர் **ஆமோஸ்** அவர்கள் அக்டோபர் 2,3&4 அகிய தேதிகளில் நமது ஷாலோம் பணித்தளங்களுக்கு வந்து பணித்தளங்களை பார்வையிடவும், **ஜுன்வானியா (மத்தியபிரதேசம்)** கிராம ஆலயத்தைப் பிரதிஷ்டை செய்யவும் தேவன் கிருபை செய்தார்.

**16–10–10** சனிக்கிழமை அன்று குஜராத்தில் ஜெரி, ஹிரோலா கிராமங்களில் நடைபெறும் Caruna Balvikas Project மூலமாக நடைபெறும் சிறுவர்கள் முன்னேற்றப் பணிகள் மூலமாக 200க்கும் அதிகமான மாணவர்களுக்கு சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டது. சகோதரி.

**வஹிதா தேவதாஸ்** அவர்கள் தலைமையில் Caruna Bal vikas ஊழியர்கள் மற்றும் ஷாலோம் பயிற்சி குழு ஊழியர்கள் இணைந்து சிறப்பாக நடத்தினார்கள். அனைத்து ஆதிவாசி மாணவர்களும் இயேசுவின் பிரசன்னத்தால் நிரப்பட்டு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டார்கள். தேவனுக்கே மகிமை!

அக்டோபர் 19,20,26,27 ஆகிய தினங்களில் குஜராத், மத்திய பிரதேசம், இராஜஸ்தான் 1, இராஜஸ்தான் 2, பகுதியில் உள்ள சுதேச ஊழியர்கள் மனைவிமார்களுக்காக சிறப்பு உபவாச கூடுகை நடைபெற்றது. தேவன் தாமே அபரிமிதமாக ஆசீர்வதித்து ஜெப ஆவியினால் நிரப்பினார்.

மேலும் அக்டோபர் 22,23,29,30 ஆகிய நாட்களில் மத்தியபிரதேசம் ஜாபுவா மாவட்டத்தில் உள்ள இரு வட்டாரத்தில் உள்ள சபைகளில் உள்ள சிறுவர் சிறுமியருக்கு சிறப்பான முகாம்கள் நடத்தப்பட்டது. சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் தலைமையில் நமது ஷாலோம் பயிற்சிக் குழு ஊழியர்கள் இந்த முகாம்ககளை சிறப்பாக நடத்தினார்கள்.

**ஷாலோம் சுதேச ஊழியர் குடும்ப முகாம்:** தேவனுக்கு சித்தமானால் நமம்பர் 8,9,10 ஆகிய நாட்களில் நம் அனைத்து ஷாலோம் ஊழியர்களுக்கான குடும்ப முகாம் ஆனந்த் பட்டிணத்தில் நடைபெற உள்ளது. இவ்வருடம் நம் அன்பு **சகோ. மோகன் சி. லாசரஸ்** அவர்களும், **கோவை சபை தலைமை போதகர் டேவிட் பிரகாசம்** அவர்களும் சிறப்பு செய்தி வழங்க இருக்கிறார்கள். இம்முகாமில் தேவ வல்லமை வெளிப்பட, புதிய தரிசனங்கள் பெற்று முழு பீல் மக்கள் இரட்சிக்கப்பட ஆத்தும பாரத்தை யாவரும் பெற்றுக் கொள்ள ஜெபியுங்கள். குறிப்பாக பாதுகாவலுக்காக, தேவைகளுக்காக, எல்லா ஆயத்தங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

தொடர்ந்து குஜராத்தில் ஜாலோத்தில் நம் மிஷன் இல்லத்தில் நடைபெறும் Sharon Memorial Hospital க்காகவும், Dr.Shiju அவர்களுக்காகவும் ஜெபியுங்கள். மேலும் Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் 750 ஆதிவாசி மாணவர்களுக்காகவும், Caruna Bal Vikas மூலமாக தாங்கப்படும் 605 மாணவர்களுக்காகவும் இராஜஸ்தானில் பிஜல்பூரில் நடைபெறும் Shalom Middle School க்காகவும் ஜெபியுங்கள். தாகோத் பணித்தள அலுவலகம் ஷாலோம் பயிற்சி குழு மற்றும் தூத்துக்குடி தலைமை அலுவலகம், முன்னேற்றப் பணிகளையும், பத்திரிகை ஊழியங்களையும் பொறுப்பேற்று நடத்திவருகிற தேவ பிள்ளைகளை தேவன் ஆசீர்வதிக்க ஜெபியுங்கள்.

மேலும் என் மனைவி வஹிதாவுக்காகவும், கோவை காருண்யா பல்கலைகழகத்தில் படிக்கும் ***Titus, Shalom*** க்காகவும், குறிப்பாக 25.10.10 தேதி அன்று மருத்துவப் படிப்பிற்காக ரஷ்யாவிற்கு சென்றுள்ள அன்பு மகள் ***Joy Shekinah*** க்காகவும் ஜெபியுங்கள். நாங்களும் உங்கள் யாவருக்காகவும் பாரத்துடன் ஜெபித்து வருகிறோம்.

**“தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்” 2சாமு. 22:31**

தேவ ஆசீர்வாதம் நம் அனைவரோடும் தங்கியிருப்பாதாக! ஆமென்.


*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(Rt.Rev.Dr.V. தேவதாஸ்)

**மேலும் என்னுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்..



சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

ஒருமுறை சுவாமி. விவேகானந்தர் அவர்கள் வெளிநாடு ஒன்றில் தனது ஊழியத்தை செய்த போது அங்கிருந்த கிறிஸ்தவ சபை தலைவர்கள் தங்களுக்கும் ஏதாவது பிரசங்கம் செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவர் மிக சுருக்கமாக எனது அன்பு கிறிஸ்தவ நண்பர்களே, மீண்டும் நீங்கள் உங்கள் இயேசுவினிடத்திற்கு திரும்பிச் செல்லுங்கள் அவர் வாழ்க்கையை கவனியுங்கள். அவர் சொல்லுவதையே செய்யுங்கள். என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டார்.

எனக்கன்பானவர்களே, நம்முடைய வேதத்தில் எபிரேயர் 3:1–ல் வாசிக்கிறோம். இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கை பண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள். நாமும் இவ்வேளையில் கிறிஸ்து இயேசுவை கவனித்துப் பார்த்து நம்முடைய வாழ்வில் இயேசுவைப் போல் ஜீவிக்க தேவன் கிருபை தருவாராக.

## 1. இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த வாழ்வு :–

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பூமியில் வாழ்ந்த 33 ஆண்டுகள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்ந்தார். அவருடைய பிறப்பிலும் பரிசுத்தம். ஏனென்றால் அவர் பரிசுத்த ஆவியினால் உற்பவித்து பிறந்தார் என்று பரிசுத்த வேதம் சொல்லுகிறது. I யோவான் 2 : 16 வசனத்தின்படி மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகள் எல்லாவற்றிலும் பரிசுத்தத்தை காத்துக் கொண்டவராய் அவர் ஊழியம் செய்தார். பாவிகளை நேசித்து பாவிகளோடு வாழ்ந்து தன் வாழ்க்கையில் பரிசுத்தத்தை காத்துக் கொண்டார். யோவான் 8 : 46–ல் வாசிக்கிறோம். என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக் கூடும் என்று இயேசு தன்னை குறித்து சாட்சி கொடுக்கிறார். இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுத்த யூதாஸ்காரியோத் இயேசுவைக் குறித்து குற்றமில்லாத இரத்தத்தை நான் காட்டிக்கொடுத்ததினால் பாவஞ்செய்தேன் என்று சாட்சி கொடுத்தான். மத்தேயு 27:24–ல் பிலாத்துவும் இந்த நீதிமானுடைய இரத்தப்பழிக்கு நான் குற்றமற்றவன் என்று இயேசுவைக் குறித்து நீதிமான் என்று சாட்சி கொடுத்தார். லூக்கா 23 : 47–ல் நூற்றுக்கு அதிபதி சம்பவித்ததைக் கண்டு மெய்யாகவே இந்த மனுஷன் நீதிபரனாயிருந்தான் என்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினான். நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.

இமயமலையின் அடிவாரத்தில் **எர்மீன்** என்ற ஒரு **பிராணி** பார்ப்பதற்கு முயலைப் போன்ற தோற்றம் உடையது. அதின் முடிகள் மிகவும் வெண்மையாக இருக்கும். அந்த முடி மிகவும் விலையேறப்பெற்றது. அந்த முடியை எடுத்து ராஜாவின் கீரிடத்தை அழகுப்படுத்துவதற்காக அதில் சேர்ப்பார்கள். அந்த எர்மின் என்ற பிராணியை வேட்டையாடுபவர்கள் வேட்டையாடி எடுத்து செல்வார்கள். அதை வேட்டையாடுபவர்கள் எப்படி பிடிப்பார்கள் என்றால் அது பகலில் இரைதேடி விட்டு மாலையில் தான் வாழும் பொந்துக்குள் நுழையும் போது வேட்டையாடுபவர்கள் பொந்துக்குள் அசீங்கமான, நாற்றம்பிடித்த பொருட்களை பொந்துக்குள் வைத்து விடுவார்கள். நாற்றம் தாங்க முடியாமல் உள்ளே நுழையாதபடி, அது வெளியே திரும்பும் நேரத்தில், எதிராக நிற்கிற வேடனை பார்க்கும். வேடன் தன்னை வேட்டையாடப் போகிறான் என அறிந்தும் கூட தான் தப்பிப்பதற்காக அந்த நாற்றம் பிடித்த பொந்துக்குள் நுழைவதில்லை. மாறாக தன்னுடைய முன்னங்கால்களை கைகூப்பி வேடன் முன்பாக அசையாமல் நிற்குமாம் அதற்கு அடையாளம் என்னவென்றால் தன் இருப்பிட நாற்றத்திற்காக தன் உயிரை மாய்த்து கொள்ள துணிகிறது. சிறிய பிராணியாகிய எர்மீன், தன் இருப்பிட சுத்தத்திற்காக, வேடன் கையில் அகப்பட்டு தன் உயிரை மாய்த்துகொள்கிறது. அதுபோல நம்முடைய பரிசுத்த வாழ்க்கைக்காக இயேசு கிறிஸ்து தன் ஜீவனை நமக்காக கொடுத்தார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் இருந்த பரிசுத்தம் நம்முடைய தனிப்பட்ட அனுதின வாழ்க்கையிலும் காணப்படும்படியாக வாஞ்சிப்போம். நாம் இயேசு கிறிஸ்துவை எவ்வளவு அதிகமாய் நேசிப்போமோ அவ்வளவு அதிகமாய் பரிசுத்தத்தை வாஞ்சிப்போம்.

## 2. இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கை :–

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெபவாழ்வு பிதாவாகிய தேவனோடு கூடியுள்ள ஐக்கியத்தை வெளிப்படுத்துகிறது. யோவான் 8 : 29–ல் என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்கும் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார். இயேசு கிறிஸ்து எப்பொழுதும் பிதாவாகிய தேவனோடு ஐக்கியமாயிருந்தபடியினாலே அவர் என்னை தனியாக இருக்கவிடவில்லை என்று இயேசு சொல்லுகிறார். பிதாவோடு கூட உள்ள ஐக்கியம் அவருடைய ஜெப வாழ்க்கை அவருடைய பிதாவோடு ஐக்கியத்தை எப்பொழுதும் வைத்துக் கொண்டதை மாற்கு 1:35–ல் அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்திரமான ஓரிடத்திற்குப்போய் அங்கே ஜெபம்பண்ணினார். லூக்கா 6 : 12, 13–ம் வசனத்தில் வாசிக்கிறது போல அவர் இராமுழுவதும் ஜெபித்தார் என்று வாசிக்கிறோம். அவர் காலையிலும், இரவிலும் ஜெபிக்க ஜெபிக்க இயேசு கிறிஸ்துவினுடைய வாழ்க்கையிலே அவர் என்ன செய்ய வேண்டுமென்பதை பிதாவாகிய தேவன் காட்டிக் கொடுக்கிறார். அவர் இரா முழுவதும் ஜெபித்து வரும் போது கீழே வந்து அப்போஸ்தலர் 12 பேர்களை தெரிந்துதெடுக்கிறார். எத்தனையோ சீஷர்கள் பின்னாக இருந்தாலும் கூட அவர் யாரை தெரிந்தெடுக்க வேண்டும் என்று ஜெபிக்கும்பொழுதே பிதாவாகிய தேவன் அவருக்கு வெளிப்படுத்துகிறார். அதைப் போல தன்னுடைய மரணவேளையிலும் கூட லூக்கா 22 : 42–

ம் வசனத்தில் வாசிக்கிறோம். அவர் பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபித்தார். லூக்கா 22 : 42 முதல் 44 வசனங்களை வாசித்துப் பாருங்கள். இந்த பாத்திரம் என்னை விட்டு நீங்கும்படி செய்யும் என்று பிதாவோடு பேசுகிறார். ஒருமணிநேரம் கெத்சமனே தோட்டத்தில் அவர் ஜெபிக்கிறார். தன்னுடைய வாழ்க்கையை முழுவதுமாக அர்ப்பணிக்கிறார். அந்த ஒரு மணி நேர ஜெபம் அவருடைய வாழ்க்கையிலே வெற்றியைத் தருகிறது என்று பார்க்கிறோம். அந்த ஒருமணி நேர ஜெபத்தின் விளைவாக யூதாஸ்காரியோத் காட்டிக் கொடுக்க வரும்போது அவரைப் பார்த்து சிநேகிதனே என்று சொல்லுகிறார்.

சிலுவையிலே மரிக்கும் போது பிதாவே இவர்களுக்கு மன்னியும் என்று ஆண்டவர் சொல்லுகிறார். அதுமட்டுமல்ல ஒரு மணிநேரம் தன்னுடைய வாழ்க்கையை பிதாவோடு ஐக்கியம் கொண்டபடியினாலே அவரைத்தேடி வரும்போது நான்தான் என்று அவர் சொல்லுகிறார். அப்பொழுது அந்த போர்ச்சேவகர்கள் பின்னிட்டு விழுந்து போகிறார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அந்த 1 மணி நேரம் பிதாவோடு கூட உள்ள ஐக்கியம் அவரை முழுமையாக பிதாவின் சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கும்படியாக வைத்தது. வேதம் சொல்லுகிறது அவர் பிதாவோடு ஐக்கியம் கொள்ள கொள்ள அந்த பெலவீனமான நேரத்திலே ஒரு தேவதூதனை அனுப்பி பிதாவாகிய தேவன் அவரை பெலப்படுத்துகிறார். அதே வேளையில் பேதுருவைப் பாருங்கள் 1 மணி நேரம் அவன் ஜெபிக்காதபடி உறங்கிவிட்டபடியினாலே, அவன் மாம்சீகத்திலே எழுந்து அவன் வேலைக்காரனுடைய காதுகளை வெட்டுகிறான் என்று பார்க்கிறோம். அதுமட்டுமல்ல இயேசுவை மறுதலித்து, இயேசுவை விட்டு தூரமாக விலகிச்சென்றான் என்றும் பார்க்கிறோம். இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுக்க வரும் போது சீஷர்கள், அங்கிருந்தவர்கள் எல்லாரும் எல்லாவற்றையும் விட்டுவிட்டு ஓடிவிட்டார்கள் என்று பார்க்கிறோம். இயேசு தன்னுடைய முழு வாழ்க்கையை அர்ப்பணித்தார் என்று நாம் பார்க்கிறோம்.

இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கையை நாம் தியானிக்கும் போது, நாமும் இயேசு கிறிஸ்துவைப் போல ஆண்டவரோடு கூட உள்ள ஐக்கியத்திலே, ஜெப வாழ்க்கையிலே நாம் முன்னேற வேண்டும். நம்முடைய ஜெப வாழ்க்கை எப்படியிருக்கிறது? நாமும் இயேசுவைப் போல ஜெபிக்க கற்றுக்கொள்ளுவோம். ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் இருக்கும் போது நமக்கு ஜெபிக்க கற்றுக்கொடுத்தார். அவருடைய ஜெப வாழ்க்கை நம்மையும் மாற்றும் என்பதில் சந்தேகமில்லை. நாமும் கூட ஜெபிக்கக் கற்றுத் தாரும் என்று ஆண்டவரிடத்தில் கேட்கும்போது ஆண்டவர் நமக்கு ஜெப ஆவியையும், விண்ணப்பத்தின் ஆவியையும் கொடுப்பார்.

### 3. இயேசு கிறிஸ்துவின் ஆத்தும பாரம் :–

மத்தேயு 9:36 சொல்லுகிறது. இயேசு திரளான ஜனங்களை பார்த்த போது அவருடைய மனம் சந்தோஷமடையவில்லை. இவ்வளவு ஜனங்கள் வந்திருக்கிறார்கள் என்று ஆண்டவர் சந்தோஷப்படவில்லை. அவர் திரளான ஜனங்களை பார்த்த போது மனதுருகினார். ஜனங்கள் எல்லோரும் மேய்ப்பனற்றவர்களாய் இருந்தார்கள் என்று வேதம் சொல்லுகிறது. அவர்கள்

மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியினால் அவர்கள் மீது மனதுருகினார் என்று வேதம் சொல்லுகிறது. அதைப் போல மத்தேயு 14 :14–ல் வாசிக்கிறோம். அவர் திரளான ஜனங்களை கண்ட போது வியாதியஸ்தர்களை கண்டு மனதுருகி அநேகரை சொஸ்தமாக்கினார். நாயீன் ஊருக்கு சென்ற போது விதவையின் மகன் இறந்துவிட்டான் என்று கண்ட போது அவர் மனதுருகி அந்த பாடையை தொட்டார் வாலிபன் எழுந்தான் என்று வேதத்தில் வாசிக்கிறோம். லாசரு இறந்த போது மரியாளும் மார்த்தாளும் கலங்கி அழுத போது இயேசு கண்ணீர் விட்டார் என்று நாம் பார்க்கிறோம். எனக்கன்பானவர்களே நம்முடைய வாழ்க்கையிலும் இயேசு கிறிஸ்து நம்முடைய இருதயத்தில் இருப்பாரென்றால் நாம் இயேசு கிறிஸ்துவை பரிபூரணமாக ஏற்றுக்கொண்டோமென்றால், நமக்குள் இந்த ஆத்துமபாரமும், மனதுருக்கமும் தங்கியிருக்கும். மத்தேயு 15 :32–ல் இவ்வாறு வாசிக்கிறோம். இவர்கள் பசியாயிருக்கிறார்கள் இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை என்று இயேசு கிறிஸ்து கூறினார். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தின் பாதையிலே அதிகமான ஆத்துமபாரம், அவருக்குள் இருந்த மனதுருக்கமும் ஊழியத்திலே அதிகமாய் இருந்தது என்று காண்கிறோம். யோவான் 4–ம் அதிகாரம் வாசித்துப் பார்க்கும் போது அங்கு ஒரு விபச்சார சமாரிய ஸ்திரீ வருகிறதைப் பார்க்கிறோம். தனக்கு பசியாயிருந்தது, தாகமாயிருந்தது ஆகிலும் கூட அந்த ஒரு ஆத்துமாவை ஆண்டவர் வழிநடத்துகிறார். அவள் இரட்சிக்கப்பட்டு முழு கிராமத்தையும் இரட்சிப்பிற்குள் வழிநடத்துகிறாள்.

நாம் ஆண்டவருக்கு ஏதாவது போஜனம் கொடுக்க வேண்டுமென்றால் யோவான் 4 : 34 சொல்லுகிறது இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொரு ஜனங்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பது பிதாவினுடைய சித்தம். அவருடைய சித்தத்தை நாம் செய்து முடிக்கிறவர்களாய் மாற வேண்டும். இயேசு மரிக்கும் போது கூட தனது வலதுபக்கத்தில் இருந்த கள்ளனை பார்த்து சொல்லுகிறார். இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசியிலிருப்பாய் அவர் உலகத்திலே ஊழியம் செய்த நாட்களில் அவருடைய மனதிலே ஆத்துமபாரமும் ஆத்துமாக்களுக்காக மனதுருக்கமும் நிரம்பியிருந்தது என்று பார்க்கிறோம். இயேசு கிறிஸ்து நமக்குள் ஜீவிக்கும் போது நம்மைச் சுற்றியிருக்கிற ஜனங்கள், நாம் சந்திக்கிற ஜனங்கள் எல்லாரையும் பார்க்கும் போது நமக்குள் ஆத்துமபாரம் இறங்கி வரவேண்டும். நமக்குள் இயேசு இருப்பாரென்றால் இந்த ஜனங்களை எப்படி இயேசு பார்ப்பாரென்று நாம் சற்று நினைத்து பார்ப்போம். இயேசு கிறிஸ்துவுக்குள் இருந்த ஆத்துமபாரம் அவரை அநேக ஜனங்களை மனதுருக்கத்தோடு பிதாவாகிய தேவனண்டையில் வழிநடத்த ஏதுவாயிருந்தது என்று பார்க்கிறோம்.

## 4. இயேசு கிறிஸ்துவின் மேலிருந்த அபிஷேகம்:–

அப்போஸ்தலர் 10: 38 வேதம் சொல்லுகிறது இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்த நாட்களிலே பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகத்தினால் நிரப்பியிருந்தார். அவர் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார். பிசாசின் பிடியில் அகப்பட்டவர்களை விடுதலை செய்தார்.

நோயினால் சிக்குண்டவர்களை அவர் சுகப்படுத்தினார் என்று நாம் பார்க்கிறோம். அவருடைய ஊழியத்தின் வெற்றிக்கு ஒரே ஒரு காரியம் என்னவென்றால் பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகம் செய்தார். லூக்கா 4 : 18–ம் வசனத்தில் கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார் அவர் தரித்திரருக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும், கட்டுண்டவர்களை விடுதலையாக்கவும் அவர் என்மேல் இருக்கிறார் என்று இயேசு கிறிஸ்து சொன்னார். பரிசுத்த ஆவியானவர் எதற்காக கொடுக்கப்பட்டார்? தரித்திரருக்கு சுவிஷேசத்தை அறிவிக்க, கட்டுண்டவர்களை விடுதலையாக்க, நோயில் அகப்பட்டவர்களை சுகப்படுத்த ஆண்டவர் அபிஷேகத்தை கொடுத்திருக்கிறார். பிதாவாகிய தேவன் அவரை அபிஷேகித்தபடியினாலே அவர் இந்த உலகத்தில் நன்மை செய்கிறவராக சுற்றித்திரிந்தார். யோவான் 14 : 12–ல் வாசிக்கிறோம். கர்த்தரை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் போது ஆண்டவர் அற்புத அடையாளங்களை செய்யும்படியாக நம்மை வைத்திருக்கிறார். இயேசுவின் மேலிருந்த அபிஷேகம் எனக்குத் தேவை என்று நாம் வாஞ்சையோடு கேட்டு அதைப் பெற்றுக்கொள்ளும் போது, நாம் சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும், வல்லமையாக ஊழியம் செய்யவும் முடியும்.

பயங்கரமான உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அந்தகாரங்களும், அநேக அறைகூவல் நிறைந்த உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த உலகத்திலே அற்புத அடையாளங்களை காணாவிட்டால் இயேசு கிறிஸ்துவை நோக்கி மக்கள் மனந்திரும்பமாட்டார்கள். இன்றைக்கு பீல் மக்கள் மத்தியில் திரளான ஆத்துமாக்களை கர்த்தர் தந்து வருகிறார் என்றால் சுதேச ஊழியர்கள் மட்டுமல்ல மூப்பர்களும், விசுவாசிகளும் இந்த அபிஷேகத்தை பெற்றுக்கொண்டவர்களாய் அவர்கள் ஆங்காங்கே சுவிசேஷத்தை அறிவித்து சாட்சிகளாய் விளங்குகிறார்கள்.

கர்த்தர் இன்றைக்கும் அற்புத அடையாளங்களை செய்து ஜீவிக்கிறார் என்பதை நிருபித்து வருகிறார். விசுவாசிகளின் அபிஷேகத்தினால் அற்புதங்கள் மூலமாக அநேக ஜனங்கள் கிறிஸ்துவுக்குள்ளாக வழிநடத்தப்படுகிறார்கள். இதை வாசிக்கிற எனக்கன்பான சகோதரனே, சகோதரியே இயேசு கிறிஸ்துவின் மேலிருந்த அபிஷேகம் நமக்கும் தேவை. அந்த அபிஷேகத்தை நாம் வாஞ்சிக்கும் போது அந்த அபிஷேகத்தின் வல்லமையை நமக்கு ஊற்றுவார். யோவான் 7:38 சொல்லுகிறது அந்த அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளும் போது அப்போஸ்தலர் 1:8–ன் படி நாம் பெலனடைந்து அவருக்கு சாட்சிகளாய் விளங்குகிறோம். நாம் இயேசுவை நோக்கிப்பார்த்து பரிசுத்தமாக வாழ ஒப்புக்கொடுப்போம். பிதாவோடு ஐக்கியம் கொள்ளத்தக்கதாய் நம்முடைய ஜெப வாழ்க்கையை ஒப்புக்கொடுப்போம். இயேசு கிறிஸ்துவைப் போல ஆத்துமபாரம், மனதுருக்கம் உடையவர்களாய் வாழ்வோம். அவர் மேல் உள்ள அபிஷேகத்தை நாமும் பெற்று நாளுக்கு நாள் சாட்சியாக மற்றவர்களுக்கு முன்பாக வாழ்ந்து காட்டுவோம். கர்த்தர் தாமே இந்த வார்த்தையையும் இந்த வசனங்களையும் ஆசீர்வதிப்பாராக. நாமும் இயேசுவைப் போல மாறுவோம். இயேசுவைப் போல வாழ்ந்து இயேசுவுக்காய் சாட்சியாய் திகழுவோம்.

# அன்பின் வேண்டுகோள்.....

***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***



அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த அக்டோபர் மாதத்தில் நுழைந்திருக்கும் நாம் இந்த ஆண்டு வரப்போகின்ற கிறிஸ்மஸைக் கொண்டாட நாம் ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாக படித்து வருகிறார்கள். நாம் அவர்களுக்கு கிறிஸ்மஸுக்காக ஏதாவது செய்தாக வேண்டும். ஆகவே நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசி பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த காணிக்கையை ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்மஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம்.

பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாக கொடுக்கலாம், அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுக்கலாம் அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன். உங்களுக்கு அதை திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

<table>
<tr><th colspan="2">நமது ஷாலோம் கிளை அலுவலகங்கள்</th></tr>
<tr><td>மார்த்தாண்டம்</td><td>Bro. G. Selvadurai<br>Kalikal House, Near A.G.Church<br>Gnaramvilai, Pacode.P.O<br>K.K Dist, Tamil Nadu 629168<br>Cell : 94876-89869</td></tr>
<tr><th colspan="2">சென்னை</th></tr>
<tr><td>Bro. B. Ebenezer Daniel<br>New no:38 Old No:76A, 2nd Floor,<br>3rd St, Gill Nagar,<br>Choolaimedu, Chennai,<br>Tamil Nadu 600 094<br>Cell : 934 44-75468</td><td>Bro. D. Diaz Bose<br>No.16F 1, M.R.J. Apartments<br>Andavar Nagar, 5th Street<br>Kodambakkam, Chennai,<br>Tamil Nadu 600 024<br>Cell : 90427-80315</td></tr>
</table>

# Pr. ஆமோஸ் (A.G. சபை, மார்த்தாண்டம்) அவர்களின்

# பணித்தள வருகை (2010 அக்டோபர் 02,03 & 04)





ஜுன்வானியா, ம.பி. கிராம ஆலய பிரதிஷ்டை





புதிய ஆலயத்திற்கான ஸ்தோத்திர ஜெபம்



Pr. ஆமோஸ் மற்றும் அவர்கள் செய்தியளிக்கிறார்.



பாடல் வேளை



கவாச்சார, வரவேற்பு அளிக்கப்பட்டது



ஜுன்வானிய கிராம ஆலய ஊழியர் குடும்பத்துடன் Pr. ஆமோஸ் அவர்கள்
மற்றும் அவருடன் வந்திருந்த சகோ. அப்டார்ராஜ் மற்றும்
சகோ. நடாஷ் கண்ணு ஆகியோர் குடும்பம் மற்றும் Rt. Rev. Dr.V. தேவதாஸ்

## பெண்கள் மாநாடு - தூத்துக்குடி -02.10.2010


செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்


கூடியிருந்த பெண்கள்

தேவனுடைய பெரிதான கிருபையாலும், இரக்கத்தினாலும் 02.10.2010 அன்று தூத்துக்குடி. பவர் IPC சபையில் வைத்து பெண்கள் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இந்தக் கூடுகையில் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் "விழித்தெழு தெபொராளே" என்ற தலைப்பில் சிறப்பு செய்தியளித்தார்கள். செய்தி வேளையில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாக செயல்பட்டார். வந்திருந்த அநேக பெண்களுக்கு செய்தி மிகவும் பிரயோஜனமாக இருந்தது. மேலும் இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த Pr. ரூபன் சாமுவேல் அவர்களுக்காவும் அவரது மனைவி சகோதரி. விக்டோரியா ரூபன் அவர்களுக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - 10.10.2010, மதுரை









தேவனுடைய பெரிதான கிருபையாலும், இரக்கத்தினாலும் 10.10.2010 அன்று மதுரையிலுள்ள சகல பரிசுத்தவான்களின் ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில் நமது சுதேச ஊழியர் சகோ. சோமா L. புரியா (உஸ்வானியா. குஜராத்) சபைகுரு Rev. V.T. ஜான்சன் அவர்கள் மற்றும் Rt.Rev.Dr. V. தேவதாஸ் அவர்களாலும் பிரதிஷ்டை செய்யப்பட்டார். மேலும் ஊழியரைத் தாங்க முன் வந்த குடும்பத்திற்காகவும், சபைகுரு Rev. V.T. ஜான்சன் அவர்களுக்காகவும் திருச்சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவருக்காகவும் தேவனைத் துதிக்கிறோம்.

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்றுவருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதம்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காய், ஊழியங்களுக்காய், ஊழியர்களுக்காய், குடும்பங்களுக்காய், ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதிஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *நவம்பர் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 05.11.2010 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** 23-A. பிள்ளையார்கோவில் தெரு, ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 8. செல் : 99940–25696 |
| 06.11.2010 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 09.11.2010 | இரண்டாம் செவ்வாய் | மாலை 7 மணி | **சகோ. தங்கராஜ்,** 4/172, C.G.E. காலனி, 4 வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9942807016 |
| 20.11.2010 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 24.11.2010 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது, தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |
| 26.11.2010 | கடைசி வெள்ளி | மாலை 7 மணி | **சகோதரி. எஸ்தர்,** 4A/258, 3 செண்ட் அந்தோணியார் புரம், தூத்துக்குடி – 8. செல் : 9994422623 |

***"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்".*** 1 பேதுரு 4:7

பீல் ஆதிவாசி மக்களுக்கு நடைபெற்ற......

# இலவச மருத்துவ முகாம்கள் மற்றும் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள்

கர்த்தருடைய அளவற்ற இரக்கங்களினால் ஒவ்வொரு வருடமும் ஷாலோம் ஊழியத்தில் மருத்துவ சுகாதாரப் பயிற்சிகளும் மற்றும் இலவச மருத்துவ முகாம்களும் நடைபெற்று வருகிறது. இந்த வருடமும் விஷேசமாக 11–10–2010 லிருந்து 15–10–2010 வரை ஷாலோம் பயிற்சி கூடம் தாகோதில் மருத்துவ பயிற்சி முகாம் நடைபெற்றது. இதில் குஜராத் மற்றும் மத்தியபிரதேசத்தை சேர்ந்த 63 சுதேச ஊழியர்கள் பங்கு பெற்றார்கள். இவர்களுக்கு 5 நாட்கள் மிகவும் அன்போடும், கரிசனையோடும் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த பயிற்சியை அளிக்கும் படியாய் Dr. Abel Ranjarthnam, Mrs. Dr. Jolly Abel, Mrs. Shanthi Jeevan மற்றும் Ms. Vanaja (Kalyani hospital, (Rusha, Vellore) Chennai. இவர்கள் வந்து 5 நாட்கள் தங்கியிருந்து மிகவும் உத்திரவாதத்துடனும், பீல் மக்களை குறித்த உண்மையான பாரத்துடன் பயிற்சி கொடுத்தார்கள். இவர்களுக்கு பணித்தள அலுவலக ஊழியர்கள் சகோ. வாலஷ் சினாய், சகோ. ஸ்டீபன் மற்றும் சகோதரி பியூலா டேவிட் ஆகியோா் மொழி பெயர்த்தார்கள். பாடங்களின் விவரங்கள் என்னவென்றால் Health மற்றும் Mother & Child Health, Personal Hygiene, Environmental Sanitation, Food & Nutrition, Nutritional deficiency Diseases, Communicable diseases, Non communicable diseases & First Aid ஆகும்.

இவர்களுக்கு 5 நாட்கள் உணவு மற்றும் தங்கும் வசதி, பயிற்சி கையேடுகள், நோட்டுகள் கொடுக்கப்பட்டன. மற்றும் LCD Projector பயன்படுத்தப்பட்டது. வீடியோ மற்றும் Flash Cards, Quiz, discussion, demonstration, question & answer எல்லாம் நடைப்பெற்றது. கடைசியாக இவர்களுக்கு Health Training Programme முடித்தவர்களுக்கென்று சான்றிதழ்கள் பிஷப் தேவதாஸ் அவர்களால் வழங்கப்பட்டது. கடைசியாக Valedictory Programme சிறப்பாக நடைபெற்றது. இதில் 4 பேர் சாட்சி கொடுத்தார்கள். இந்த Training Programme பொறுப்பாக Sis. Vahitha Devadass அவர்கள் நடத்தினார்கள். கர்த்தருக்கே மகிமை செலுத்துகிறோம்.

இலவச மருத்துவ முகாம் 11,13 ஆகிய தினங்களில் 2 இடத்தில் தாகோத் மற்றும் ஜாலோதில் நடைபெற்றது. இதில் சுமார் 250 பேர் வந்து சரியான சிகிச்சையை பெற்றார்கள். வந்திருந்த இவர்களில் சுமார் 10 பேர் மிகவும் நோய்வாய்ப்பட்டவர்களாக, முக்கியமான பெரிய நோயினால் தாக்கப்பட்டவர்களாய் வந்திருந்தார்கள். இந்த மருத்துவ முகாமில் முக்கியமாக Dr. Abel மற்றும் Dr. Shiju அவர்களும் சிகிச்சையளித்தார்கள். Mrs. Shanthi Jeevan, Ms. Vanaja, Sis. Dhana Mary, Mr. Sunil, Mrs. Beulah David, Mrs. Sandra Jeyaraj ஆகியோா் ஊசி மற்றும் மருந்துகள் கொடுப்பத்தில் உதவினார்கள். இந்த மருத்துவ முகாமையும் தேவன் அதிகமாய் ஆசீர்வதித்தார்.

புகைப்படங்களை 16 & 17 ஆகிய பக்கங்களில் காணலாம்...

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமத் திட்டம்

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 12 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் “சிறப்பு விருது” கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம்...

உங்களில் பலர் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2010ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்பட்டன. இதில் 5000 வேதாகமங்கள் **இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி** ஊழியங்கள் மூலமாக கொடுக்கப்படவுள்ளன. மேலும் ரூ. 80 வீதம் 5000 வேதாகமங்களுக்கு நிதி உதவித் தேவைப்படுகிறது. நிதி உதவி ரூ. 4 லட்சங்கள் கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில் உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

## தங்களை தேவனுக்கு அர்பணித்துள்ள 22 புதிய ஷாலோம் சுதேச ஊழியர்கள்

| வ. எண் | ஊழியர் | கிராமம் | தாலுகா | மாவட்டம் | மாநிலம் |
|---|---|---|---|---|---|
| 1 | Mr.Mojhi Ditha Sangada | Bheigam | Garpada | Dahod | GUJ |
| 2 | Mr.Sanjay Raman Ratuva | Devgad | Chottaudaipur | Baroda | GUJ |
| 3 | Mr.Karan Vestha Ratuva | Padaliya | Chottaudaipur | Baroda | GUJ |
| 4 | Mr. Abhishk Mangilal Ninama | Pipalipada | Jhabuva | Jhabuva | MP |
| 5 | Mr.Rakesh Raju Bilwal | Nagarpura | Petlavad | Jhabuva | MP |
| 6 | Mr.Vijay Kharakiya Damor | Ghujharpada | Meghnagar | Jhabuva | MP |
| 7 | Mr.Shanthu Surthan Ada | Mezhal | Thandhla | Jhabuva | MP |
| 8 | Mr.Rakesh Nagji Bhuriya | Chottachpshalya | Meghnagar | Jhabuva | MP |
| 9 | Mr.Shanthu Puna Damor | Jhavliya | Petlavad | Jhabuva | MP |
| 10 | Mr.Titus Bhovan Vaniyah | Amalipathar | Jhabuva | Jhabuva | MP |
| 11 | Mr.Super Kasu Damor | Alipura | Thandhla | Jhabuva | MP |
| 12 | Mr.Hursingh Bhuriya | Charel | Meghnagar | Jhabuva | MP |
| 13 | Mr.Tholsingh Valhingh Kattara | Navagam | Khushalgad | Banswada | RAJ |
| 14 | Mr.Akhilesh Dhalsingh Dindod | Jakodiya | Khushalgad | Banswada | RAJ |
| 15 | Mr.Dhilip Madhu Bhuriya | Radhanraj | Khushalgad | Banswada | RAJ |
| 16 | Mr.Velji Kanji Charpota | Dungaripada | Khushalgad | Banswada | RAJ |
| 17 | Mr.Kanthilal Fagnaji Ghorana | Jogivadi | Kottasavli | Udaipur | RAJ |
| 18 | Mr.Badhrilal Kalu Kattara | Simelah | Bagidhora | Banswada | RAJ |
| 19 | Mr.Laxman Jemla Pargi | Jogivada | Bagidhora | Banswada | RAJ |
| 20 | Mr. Manoj Jeyanthi Meida | Potteliyaranga | Khushalgad | Banswada | RAJ |
| 21 | Mr.Amarsingh Pawansingh Meida | Peradungari | Khushalgad | Banswada | RAJ |
| 22 | Mr. Teja N. Kamol | Phat Vadla | Khushalgad | Banswada | RAJ |

**சகோதரரே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள். 1 தெச. 5:25**

# 22 ஷாலோம் புதிய சுதேச ஊழியர்களுக்கு 30 நாள் பயிற்சி

பிரியமானவர்களே,

நமது தலைமுறையில் அனைத்து பீல் மக்களும் இரட்சிக்க தேவன் தந்த பணியில் புதிதாக 22 சுதேச ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, 30 நாட்கள் சிறப்பு பயிற்சி பெற்று நமது ஊழியத்தில் இணைக்கப்பட்டு தேவனுடைய பணியைத் தொடங்கியுள்ளனர். இவர்களுக்கும் இவர்களது குடும்பங்களுக்கும், நமது பணித்தளத்தில் வைத்து மூன்று நாட்கள் விடுதலை முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் இவர்களது ஊழியம் உறுதி செய்யப்பட்டது. இதன்பின் புதிய ஊழியர்கள் அனைவருக்கும் கடந்த அக்டோபர் மாதம் முழுவதும் சிறப்பு பயிற்சி நடைபெற்றது. இந்த ஊழியர்கள் ஊழியத்தில் நிலைத்திருந்து, தேவனுக்காக முழுமையாக உழைக்கவும், தேவன் இவர்களை பாதுகாக்கவும் மறவாமல் ஜெபியுங்கள்.

மேலும் இந்த 22 சுதேச ஊழியர்களை மாதம் ரூ. 2000/– கொடுத்துத் தாங்கக் கூடிய மிஷனெரி ஆதரவாளர்கள் உடனடியாகத் தேவைப்படுகிறார்கள். தேவன் உங்கள் உள்ளத்தில் ஏவினால் சபையாக, குழுவாக, குடும்பமாக ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள், மேலும் உங்கள் உறவினர்கள் நண்பர்களிடம் அறிமுகப்படுத்துங்கள். தேவன்தாமே உங்களையும் உங்களது குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

தொடர்புக்கு : 09345675468





பயிற்சி பெற்ற 22 புதிய சுதேச ஊழியர்களுடன் Rt. Rev.Dr.V. தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ்

# 2010 - அக்டோபர் - 11 முதல் 15 வரை பீல் ஆதிவாசி மக்களுக்கு நடைபெற்ற
## இலவச மருத்துவ முகாம்கள் மற்றும் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம்கள்




பீல் ஆதிவாசி மக்களுக்கு மருத்துவம் பார்க்கும் Dr. Abel, Dr. Sheju




சிகிச்சை பெறும் நோயாளிகள்




நோயாளிகளுக்க மருந்துகள் மற்றும் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன



இரத்தப் பரிசோதனை நடைபெறுகிறது



காத்திருக்கும் நோயாளிகள்




Dr. Abel அவர்கள் பயிற்சியளிக்கிறார்கள்



Dr. Jolly Abel அவர்கள் பயிற்சியளிக்கிறார்கள்



Sis. சாந்தி அவர்கள் பயிற்சியளிக்கிறார்கள்



பயிற்சிக் குழுவினர்



பயிற்சி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன



பயிற்சியின் போது



ஷாலோம் சபைகளைச் சேர்ந்த பீல் ஆதிவாசி சிறுவர், மற்றும் வாலிபர்களுக்கு நடைபெற்ற

# சிறப்பு முகாம்கள் - 2010





கூடியிருந்த சிறுவர் மற்றும் சிறுமியரில் ஒரு பகுதி



ஆராதனை வேளை



சிறுவர்களுக்கான சிறப்பு செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



கலந்துரையாடல் நேரம்



குறு நாடகங்கள் மூலம் ஆண்டவரின் அன்பை வெளிப்படுத்துதல்



இயேசு கிறிஸ்துவுக்காய் தங்களை முழுமையாக அர்ப்பணிக்கும் சிறுவர்கள்



உணவு வேளை

## ஷாலோம் திருச்சபைகளைச் சேர்ந்த பீல் ஆதிவாசி சிறுவர் மற்றும் வாலிபர்களுக்கு நடைபெற்ற

# சிறப்பு முகாம்கள்



தேவனுடைய பெரிதான கிருபையினால் ஷாலோம் ஊழியத்தில் ஒவ்வொரு வருடமும் சிறுவர், சிறுமியர்களுக்கென்று தனித்தனி முகாம்கள் மற்றும் வாலிபர், வாலிப பெண்களுக்கென்று தனித்தனி முகாம்கள் நடைபெற்று வருகிறது. தேவனுக்கே மகிமையுண்டாவதாக.

இந்த வருடத்திலும் கடந்த மாதம் 19 மற்றும் 20 தேதிகளில் சிறுவர், சிறுமியர்களுக்கு தனித்தனியாக முகாம்கள் நடைபெற்றது. மற்றும் 25, 26 தேதிகளில் வாலிபர் மற்றும் வாலிப பெண்களுக்கென்று நடைபெற்றது. இந்த முகாம்களில் சுமார் 850 பிள்ளைகள் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள்.

**“கர்த்தருடைய வசனம்”** என்ற தலைப்பில் இந்த மிகவும் அழகாக படங்களுடனும், உதாரணங்களுடனும் கற்றுக் கொடுக்கப்பட்டது. இந்த தலைப்புக்கு ஏற்ற மாதிரி action songs மிகவும் உற்சாகமாய் சொல்லிக் கொடுக்கப்பட்டது. பிள்ளைகள் மிகவும் சந்தோஷமாய் பாடல்களை ஆடிப் பாடி துதித்ததை பார்க்கும்போது கண்கொள்ளா காட்சியாக இருந்தது. மட்டுமல்லாமல் 12 பேர் கொண்ட குழுக்களாக சிறுவர்களை பிரித்து, 25 ஆசீரியர்கள் இந்த group discussion நடத்தி பிள்ளைகளுக்கு வசனங்களை கற்றுக் கொடுத்தார்கள். மற்றும் ‘குறுநாடகம்’, கர்த்தருடைய வசனம் **‘ஆவியின் பட்டயம்’** என்றும், பிசாசை நொறுக்கி வசனத்தினால் ஜெயம் பெறுவது பற்றியும் நாடகம் நடித்து காட்டப்பட்டது. மட்டுமல்லாமல் **‘விதை உவமானம்’** பற்றியும் கற்பாறையில் கட்டினவன் புத்தியுள்ளவன் என்பதை பற்றியும், மற்றும் கர்த்தருடைய வசனம் பற்றியும், Quiz programme நடத்தி பரிசு கொடுக்கப்பட்டது. காலை டிபன் மற்றும் மதிய உணவு, இனிப்பு மற்றும் மாலை டீ, பிஸ்கட் வழங்கப்பட்டது.

கடைசியாக பிள்ளைகள் நல்ல அர்ப்பணிப்புக்குள் நடத்தி, வேதவசனம் எவ்வளவு முக்கியம் என்றும், வேதாகமத்தை தினமும் வாசிக்க வேண்டும் மட்டுமல்லாமல் அதன்படி நடக்க வேண்டும் என்றும் போதித்து, ஜெபித்து அபிஷேகத்திற்குள் நடத்தப்பட்டார்கள். தேவ வல்லமை இறங்கி கர்த்தருடைய கரம் பிள்ளைகளை ஆசீர்வதித்தது. அனைவரும் ஆவியில் நிறைந்து, ஆசீர்வாதம் பெற்று சென்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக:

# காணிக்கை அனுப்பும் வழிகள்

- ⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- ⇨ **M.O.** மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- ⇨ **D.D./Cheque** மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை **Sharing Love Mission** என்ற பெயருக்கு அனுப்பலாம்.
- ⇨ இன்டர்நெட்டில் **NET TRANSFER** வசதி உங்களுக்கு இருந்தால் **NET TRANSFER** மூலமாகவும் அனுப்பலாம்.
- ⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் **"V. DEVADASS" (or) Sharing Love Mission** என்ற பெயருக்கு **D.D., (or) Cheque** மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம்.

---

***கீழ்க் கண்ட வங்கிகளிலும் எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

| Tamilnad Mercantile Bank<br>A/c. No. : 106100710400009 | Axis (U.T.I) Bank ,<br>A/c. No. : 105010100094373 |
|---|---|

**ICICI Bank A/C. No. 613901112799**

## SHALOM LIFE MEMBERSHIP ENROLLMENT

## ` ôúXôm F¯V BÜs LôX AeLj§]WôL AûZl×

***கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,*** ஆவியானவரின் வழிநடத்துதலின்படி ரூ. 1000/– ஒரு முறை செலுத்தி ஷாலோம் ஊழியத்தின் ஆயுள் கால அங்கத்தினராக இணையும்படி அன்புடன் அழைக்கிறோம். இந்தத் திட்டத்தில் இணைந்தவுடன் உங்களுக்கு சிறப்புச் சான்றிதழ், மாதம்தோறும் பத்திரிகை, மற்றும் வருடம் ஒருமுறை ஊழிய வளர்ச்சிக் குறித்த சிறப்பு அறிக்கை அனுப்பப்படும். உங்களுக்காக நாங்கள் தொடர்ந்து ஜெபித்து வருகிறோம். மேலும் இந்தத் திட்டத்தின் மூலம் வரும் நிதியினால் மாதாந்திர செலவினங்கள் ஏற்ற காலங்களில் செய்யப்படவும், நிதி நெருக்கடி நேரங்களை சமாளிக்கவும், ஒரு சிறப்பு வைப்பு நிதியாக வைக்கத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வருட இறுதிக்குள்ளாக, குறைந்தது 1000 அங்கத்தினர்கள் இணைக்கப்பட ஜெபித்து வருகிறோம். முதலாவது நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் அங்கத்தினராக இணையுங்கள், மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு இத்திட்டத்தை அறிமுகப்படுத்துங்கள். உங்களுக்கு மிகவும் நெருக்கமானவர்களில் குறைந்தது 5–லிருந்து 10 பேருக்காவது இத்திட்டத்தை அறிமுகப்படுத்த சிறப்பு ரசீதுகளும், ஊழிய அறிமுக அறிக்கைகளும் அனுப்புகிறோம். நீங்கள் இந்தத் திட்டத்திற்காக உதவி செய்து, பீல் மக்கள் மத்தியில் தேவனுடைய ராஜ்ஜியம் விரைவாக கட்டப்பட உதவுங்கள். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்....

*அன்பார்ந்த ஊழியப் பங்காளர்களே,*

*அன்பராம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துகிறோம்....*

SUdLôn éª«úX TôXL]ôn ©\kÕ, AtxReLû[Ùm A§NVeLû[Ùm CkR éª«úX ùNnÕ, TôÓThÓ, £ÛûY«úX U¬jÕ, APdLmT iQITThÓ, êu\ôm Sô°úX E«ojùRÝkR B i PYo CúVÑ ¡±vÕ®u ©\kR Sô[ôL Sôm ùLô i PôÓYÕ ¡±vÕUv §]Uô Ïm. CkR ¡±vUv §]jûRd ùLô i PôP CúVÑ ¡±vÕûYd Ï±jÕ §Vô²jÕ, ù_©jÕ RVôWôYÕ SUÕ LPûUVô Ïm.

YÚPkúRôßm ¡±vUv U]U¡rf£«u Sôh L°p SmØûPV ÑúRN F¯VoLÞdÏm AYoLs Uû]®UôoLÞdÏm, AYoLs ©sû[LÞdÏm ×jRôûPLs ùLôÓjÕ, AYoLÞm ¡±vUv-I ùLô i PôP Sôm ER®VôL CÚITRtLôL úRYû]j Õ§d¡ú\ôm. AúR úTôp SmØûPV Ts° Utßm ®Ó§«p T¥jÕYÚm Sm B§Yô£ UôQY, UôQ®LÞdÏm, £ß ©sû[LÞdÏm ×jRôûPLs Utßm ùYÏU§Ls ¡±vUv §]eL°p ùLôÓjÕ YÚ¡ú\ôm.

BLúY CkR B i Ó CkR Lô¬VeLÞdLôL ÑUôo ì. 8 XhNeLs YûW úRûYÙs[Õ. BLúY LojRo EeLs Es[j§p H®]ôp JÚ F¯V¬u ÏÓmTj§tÏ Ïû\kRÕ ì. 1000/- ApXÕ ARtÏ úUXôLúYô, JÚ B§Yô£ ©sû[dÏ Ïû\kRÕ ì. 500/- ApXÕ ARtÏ úUXôLúYô, ¡±vUv ùYÏU§VôLd ùLôÓjÕ ERY AuTôn AûZd¡ú\ôm.

CkR ùYÏU§ Lô¦dûLLû[ SYmTo UôRj§tÏsú[úV Aàl©]ôp ÑúRN F¯VoLs ÏÓmTj§tÏm, B§Yô£ ©sû[LÞdÏm AuT°I×Lû[ ¡±vUvdÏ ØuTôL ùLôÓdL ER®VôL CÚdÏm.

¿eLs ùLôÓdL ®Úm×m Lô¦dûLLû[ úSW¥VôL çjÕdÏ¥ RûXûU AÛYXLj§tÏ Aàl© ûYdLXôm. ApXÕ GeLs `ôúXôm ©W§¨§L°Pm ùLôÓjÕ CWºûRI ùTtßd ùLôs[Üm.

CkR Àp UdL°u NkúRô`júRôÓ ¡±vUv-I YWúYtúTôm! úRY Bº oYôRjûRI ùTtßd ùLôs[Xôm!!



கடந்த ஆண்டு வழங்கப்பட்ட

புத்தாடைகள் மற்றும் அன்பளிப்புகளுடன்

நமது பீல் ஆதிவாசி சிறுவர்களில் ஒரு சிலர்

# மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்களின்
## 2YÕ B i Ó BWmTd áÓûL (ஆறுமுகநேரி 09&10, அக்.-2010)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் **Rt.Rev.Dr.V. தேவதாஸ்** அவர்களுக்கும் **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். கடந்த மாதம் அக்டோபர் 9,10 தேதிகளில் நடந்த ஊழியத்தின் மூலமாக, குடும்பங்கள் இயேசுவுக்கு என்ற தலைப்பில் கூட்டங்களை நடத்த தேவன் உதவி செய்தார். இந்த கூட்டத்தில் ஆவியானவர் இறங்கி அசைவாடினதை அநேக தேவபிள்ளைகளும் நாங்களும் கண்டு தேவனை மகிமைப்படுத்தினோம். முதல் நாள் கூட்டத்தில் **சகோதரி.வஹிதா தேவதாஸ்** அவர்கள் தேவனுடைய வார்த்தையை கொண்டு வந்தார்கள். ஏசாயா**–44:3 ல் உள்ள படி உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்** என்ற தலைப்பில் **நோவாவின் குடும்பம், தாவீதின் குடும்பம், கொர்நேலியு குடும்பம்** ஆகிய மூன்று குடும்பத்தை மையமாக வைத்து தேவனுடைய வார்த்தையை கொண்டு பேசினார்கள். கடைசி ஜெபவேளையில் ஆவியானவர் அசைவாடினார். தேவனுடைய வெளிப்பாடு ஜனங்களுக்குள் பிரத்தியட்சமாய் வெளிப்பட்டது. **சகோதரி–வஹிதா தேவதாஸ்** அவர்கள் கொடுத்த சாட்சியும், பணித்தளத்தை பற்றிய செய்தியும் அநேகரின் உள்ளத்தில் வாஞ்சையை தூண்டினது. நாமும் இயேசுவுக்காக வாழவேண்டும் என்ற எண்ணமும் ஜனங்கள் உள்ளத்தில் உண்டானது. சகோதரி சொன்ன சாட்சியில் அவர்களுடைய திருமணம் முடிந்து 40 நாளில் தேவதரிசனம் பெற்று பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் 20 ஆண்டுகள் ஊழியம் செய்யவும், அதன் மூலமாக பணித்தளத்தில் 22,000 குடும்பங்களை தந்திருக்கிறார். இன்றைக்கு வரைக்கும் கிரியை செய்கிறதை உணர முடிகிறது.

2வது நாள் கூட்டத்தில் **சகோ.தேவதாஸ்** அவர்கள் ஜெபித்து கூட்டத்தை ஆரம்பித்தார்கள். தேவன் விரும்புகிற குடும்பம் என்று **சீமோன் பேதுரு, மார்த்தாள் லாசரு குடும்பம், அப்போஸ்தலர்–1:15 மையமாக** வைத்து சாட்சியையும், தேவ செய்தியையும் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய சாட்சியை கேட்ட ஜனங்கள் கண்ணீருடன் தேவனுக்காய் நாமும் வாழ வேண்டும் என்று ஒப்புக்கொடுத்தார்கள். அநேகர் ஆவியிலும், ஆத்துமாவிலும், சரீரத்திலும் விடுதலை பெற்றார்கள். **சேகர குருவானவர் N.S. எரேமியா** அவர்கள் கூட்டத்தின் இறுதி ஜெபத்தை ஏறெடுத்தார்கள்.

இரண்டு நாள் கூட்டங்களும் சிறப்பாகவும், ஆசீர்வாதமாகவும் நடைபெற்றது. ஆறுமுகநேரியில் உள்ள அநேக ஊழியக்காரர்களும், ஊழியக்காரிகளும், கலந்து கொண்டார்கள். சபை பாகுபாடின்றி அநேக தேவ பிள்ளைகளைக் கொண்டு ஆறுமுகநேரியிலுள்ள **பாரிஸ் ஹால்** நிரம்பி வழிய தேவன் கிருபை செய்தார். இதுவரையில்லாத பலத்த அபிஷேகம் உண்டானது.

– சகோ. கிறிஸ்டின் கெனிஸ்டன் (மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்கள், ஆறுமுகநேரி)

## மகிமையின் இயேசு மாறாதவர் ஊழியங்களின்

# இரண்டாம் ஆண்டு ஆரம்ப கூடுகை ஆறுமுகநேரி - 09&10-10-2010


கூட்டத்திற்கு தலைமை தாங்கிய
Rev. ஜெரேமியா அவர்கள்


கூட்டங்களை நடத்திய
சகோ. கிறிஸ்டின் கெனிஸ்டின்




பாடல் மற்றும் ஆராதனை வேளை


செய்தி வேளையில்
Rt. Rev. Dr. V. தேவதாஸ் அவர்கள்


செய்தி வேளையில்
சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்


கூடியிருந்த தேவ ஜனங்கள்


சகோ. சகோ. கிறிஸ்டின் கெனிஸ்டின் அவர்கள்
குடும்பத்திற்காக ஜெபம்

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்



| | | |
|---|---|---|
| மாணவனின் பெயர் | : | **வினோத் H. பன்தா** |
| தந்தையின் பெயர் | : | ஹிர்ஜி பன்தா |
| பிறந்த நாள் | : | 04.02.1998 |
| படிக்கும் வகுப்பு | : | 7th Std., |
| சொந்த ஊர் | : | ஹசார்வாடி |
| மாவட்டம் | : | பான்ஸ்வாடா |
| மாநிலம் | : | ராஜஸ்தான் |

## மாணவனின் பெற்றோரைப் பற்றி சில வரிகள்:–

வினோத் பன்தாவின் தந்தை ஹிர்ஜி பன்தா இயேசு கிறிஸ்துவை அறியாத ஒரு பீல் ஆதிவாசி. வியாதி வந்தால் உடனடியாக மந்திரவாதிகளை நாடிச்செல்லும் பழக்கமுடைய இவர்கள், மிகவும் அந்தகாரத்தில் வாழ்ந்து வந்தவர்கள்.

இந்த சூழ்நிலையில் இவருடைய தகப்பனார் வியாதிப்பட்டு, கை மற்றும் கால்கள் செயல் இழந்து காணப்பட்டர். மந்திர வாதிகளிடம் கொண்டு சென்று அநேக மந்திரக் கிரியைகள் செய்தும் பலனில்லை, மாறாக வியாதி அதிகமானது. மிகவும் வேதனையுடன் சமாதானமின்று இவர்கள் காணப்பட்ட சூழ்நிலையில் இவரது உறவினர் பக்கத்து கிராமத்தில் ஊழியம் செய்து வரும் சுதேச ஊழியரைக் குறித்துக் இவர்களுக்கு கூறி, அவரை ஜெபம் செய்ய அழைத்தார். ஊழியரும் வந்து இவருக்காக பாரத்துடன் ஜெபித்தபோது தேவன் அற்புதமாக ஹிர்ஜி பன்தாவின் தகப்பனாருக்கு சுகத்தைக் கொடுத்தார். தேவனுக்கே மகிமை! இந்த அற்புதத்தைக் கண்ட அந்த கிராமமே ஆச்சரியத்தில் மூழ்கியது. உடனடியாக இவர் தனது தந்தைக்கு சுகம் தந்த தெய்வமே உண்மையான தெய்வம் என்று குடும்பமாக ஏற்றுக் கொண்டார். பின்பு தங்களது பாவங்களை விட்டு மனம் திரும்பினார்.

பின்பு தங்கள் குடும்பத்திற்கு விடுதலை தந்த இயேசு கிறிஸ்துவை தனது கிராமம் முழுவதும் அறிவிக்க வேண்டும் என்று தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை:–** படிப்பதிலும், நன்றாக ஜெபிப்பதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு.

**ஜெபியுங்கள்:–** இவன் நன்றாக படிக்க, தேவன் விசேஷித்த ஞானத்தைத் தரவும் ஜெபியுங்கள்.

**மாணவனைத் தாங்குபவர் :** Mr. சுந்தர்சிங், ஸ்ரீவில்லிபுத்தூர்

நீங்களும் மாதம் ரூ. 500/– கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரை ஜெபித்துத் தாங்க முன் வரலாம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்குவதற்கு அறிமுகப்படுத்தலாம்.

# ஜெபக்குறிப்புகள்

- முழு பீல் ஆதிவாசி மக்கள் நம் தலைமுறையில் இயேசுவை அறியவும், இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.

- குஜராத், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் 3 மாநிலங்களிலும் திருச்சபை ஒருங்கிணைப்பு பணி நடைபெற்று வருகிறது. தேவன் ஞானம் தந்து அனைவரும் இணைந்து ஒருமனமாகச் செயல்படவும் 3 மாநில ஒருங்கிணைப்பாளர்களை தேவன் பயன்படுத்தவும் ஜெபியுங்கள்.

- Shalom Charity Mission மூலமாக தாங்கப்படும் 750 பீல் ஆதிவாசி மாணவர்கள் மற்றும் Compassion மூலமாக தாங்கப்படும் 605 ஷாலோம் மாணவர்கள் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபியுங்கள். கல்விப் பணிக்கான அதிகமான தேவைகள் ரூ. 4 இலட்சம் கிடைக்கப்பெற, இவ்வருடத்தில் மாதம் ரூ. 400 கொடுத்துத் தாங்கும் ஆதிவாசி மாணவ ஆதரவாளர்கள் 200 பேர்கள் கிடைக்கப்பெற ஜெபியுங்கள்.

- இவ்வருடம் 3 மாநிலங்களில் 85 கிராமங்களில் ஆலயம் கட்டப்பட தேவன் ஆதரவாளர்களை எழுப்ப, அனுமதி கிடைத்து தடையின்றி கட்டப்பட, குறிப்பாக அவசரமாகக் கட்டப்படவேண்டிய ஆலயங்களுக்காக ஜெபியுங்கள்.

- பணித்தளத்திற்கு தேவையான Media உபகரணங்கள் வீடியோ கேமரா, Audio Recording equipments (Rs.1.5 Lakhs) உடனடியாக கிடைக்கப்பெறவும், Media Department –ல் பணியாற்ற நல்ல ஊழியர் கிடைக்கவும் ஜெபியுங்கள்.

- அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் கிடைக்கப்பெறும் ஒவ்வொருவரும் வாசிக்க, ஜெபிக்க, ஊழியங்களைத் தாங்க ஜெபியுங்கள். மேலும் அனுப்பப்படுகிற ஊழிய அறிக்கைகள், நன்றிக் கடிதங்கள், ஜெப விண்ணப்பப் பதில்கள் சரிவர கிடைக்கப் பெறவும் email, SMS, website மூலம் கொடுக்கப்படும் செய்திகள் சரிவர கிடைக்கப்பெறவும் ஜெபியுங்கள். கடிதப் பரிமாற்றங்கள் எந்தவிதத் தடையுமின்றி நடைபெற ஜெபியுங்கள்.

- **Rt. Rev. Dr. V. Devadass, Sis. Vahitha Devadass** மற்றும் பிள்ளைகள் **Gladson Titus (MBA II Year) Brighton Shalom (B.Tech Media Final Year) Joy Shekinah ( Applying for Medical studies)** இவர்களுக்காக ஜெபியுங்கள்.

- நம் ஊழியத்திற்கு மிக மிக அவசர தேவையான, ரூ. 500/– கொடுத்து ஜெபித்துத் தாங்கக் கூடிய 1000 ஷாலோம் ஊழிய பங்காளர்கள் எழும்பப் பாரத்துடன் ஜெபியுங்கள்.

- நவம்பர் மாதம் 8,9,10 ஆகிய தேதிகளில் பணித்தளங்களில் சகோ. மோகன் சி. லாசரஸ் (இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி) அவர்கள் பங்கு பெறும் சுதேச ஊழியர் குடும்ப முகாமிற்காக ஜெபியுங்கள். இந்த முகாமில் தேவ வல்லமை வெளிப்படவும், ஒவ்வொரு ஊழியரும் அபிஷேகத்தாலும், தரிசனங்களாலும் நிரப்பப்படவும், ஊழியர்களின் பிரயாணங்களுக்காவும், பாதுகாவலுக்காகவும், தடைகள் நீங்கி தெய்வீக பாதுகாவல் கிடைக்கவும், தேவ ஊழியர்களை தேவன் அக்கினி ஜுவாலையாக பயன்படுத்தவும், கூட்ட ஒழுங்குகளுக்காகவும், இயற்கை சூழ்நிலைகள் நமக்கு சாதகமாக இருக்கவும், முகாமிற்கு தேவையான நிதி உதவி கிடைக்கப் பெறவும் ஜெபியுங்கள்..

தேவகிருபையாலும், அநேக நாட்கள் ஜெபத்தினாலும், பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலின்படி ஊழியங்களை கண்டு ஊழியம் செய்வதற்கு தேவன் மறுபடியும் கிருபை செய்தபடியால் தேவனைத் துதிக்கிறேன். இம்முறை நானும் (Pas.Amos, A.G. Church, Marthandam), மற்றும் சகோ. ஆல்பர்ட் குடும்பம், சகோ. நாட்டார்கண்ண குடும்பம் இணைந்து பீல் மக்கள் பணித்தளத்தை காண தேவன் கிருபை தந்தார். முன்பதாக Delhi நாங்கள் செல்லவும், Delhi லிருந்து **1–10–10** அன்று ஸ்வராஸ் எக்ஸ்பிரஸ் மூலமாக தாகோத் பணித்தளம் செல்ல கிருபை தந்தார்.

**2.10.10** அன்று மத்திய சத்லம் மாவட்டத்தில் ஜீன்வானியா ஆலயகிராம பிரதிஷ்டைக்கு செல்ல வேண்டும். ஆனால் ரயில் மூன்று மணி நேரம் கால தாமதம் ஆனபடியால் தாகோத்திற்கு முன் மேஹ்நகர் ரயில் நிலயத்தில் இறங்கினோம். அங்குள்ள நம் ஊழியர்கள் Pas. பால் முனியா, Pas. பூர்சன் புரியா, Pas.மத்சர் பூரியா எங்களை வரவேற்று அங்குள்ள Catholic Mission Guest House ல் ஆயத்தமாக உதவி செய்தார்கள். Rt.Rev.DR.V. தேவதாஸ் அவர்களும் மேஹ்நகர் வந்தவுடன் பணித்தளத்திற்கு சுமார் 100 கி.மி பிரயாணம் செய்தோம். காடு, மலைகள், நதிகள் ஆதிவாசி கிராமங்களைக் கடந்து சென்று ஜுன்வானியா கிராமத்தை அடைய மாலை 4:30 மணியாகிவிட்டது. ஆனால் அனைத்து விசுவாசிகளும் காத்திருந்தது எங்களுக்கு சந்தோஷத்தையும் ஆச்சரியத்தையும் அளித்தது.

ஜுன்வானியா கிராம ஆலயத்தை நான் ஜெபித்து பிரதிஷ்டை செய்ய தேவன் கிருபை தந்தார். Rt.Rev.DR.V. தேவதாஸ் அவர்கள் தேவ ஜனங்களை சிறப்பாக நடத்தினார்கள். சிறப்பு பாடல் பாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். சகோ. ஆல்பட் அவர்கள் இந்த கிராம ஆலயம் கட்டுவதற்கு ரூ.80,000 எப்படி கொடுக்க தேவன் கிருபை தந்தார் என்பதை சாட்சியாக கூறினார்கள். அவர்களுக்காக சபையார் ஜெபித்தார்கள். ஸ்தல ஊழியர் சுர்பால் சங்காடா அவர்கள் வந்து எங்கள் அனைவரையும் கலாச்சார முறைப்படி மலர்மாலைகளைப் போட்டு, சால்வை அணிவித்து வரவேற்றார்கள். தேவ செய்தியை அடியேன் கொடுத்து ஜெபித்த போது பரிசுத்த ஆவியானவரின் அருள்மாரி ஊற்றப்பட்டது. உற்சாகமாக தேவ ஆலயத்தில் வந்த அனைவரும் காணிக்கைகளை படைத்தார்கள். புறப்படும் போது அனைவரும் கண்ணீர் மல்க நன்றி கூறி வழியனுப்பினார்கள்.

வரும் வழியில், இரவு 8:30 மணி அளவில், உடன் வந்த சுதேச ஊழியர் ராமேஷ்வர் சர்போடா கிராமத்தில் தன் வீடு வழியில் உள்ளது கண்டிப்பாக வரவேண்டும் என கூறினார்கள். காட்டுப் பாதையில் நேரமாகி விட்டது அடுத்த முறை வருகிறோம் என்று பிஷப் தேவதாஸ்

அவர்கள் கூறிய போது ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்தார்கள். முதன் முறையாக எங்கள் பகுதியை கடந்து செல்லுகிறீர்கள். உங்கள் பாதம் எங்கள் வீட்டில் படவேண்டும். எங்கள் சிறிய வீட்டையும், எங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதியுங்கள் என்றார். உடனே அவர்கள் சிறிய வீட்டிற்குள் சென்று மின்சார வசதி, எந்த வசதியுமில்லாத வீட்டில் அவர்களை ஆசீர்வதித்து ஜெபித்த போது அவர்கள் உள்ளம் சந்தோஷத்தில் பொங்கி வழிந்தது. இப்படி தான் 460 ஊழியர்களும் தங்கள் வீட்டடிற்கு ஊழியர்கள் வருவதை எவ்வளவு ஆசீர்வாதமாக கருதுகிறார்கள் என்று வியப்படைந்தோம்.

3.10.2010 ஞாயிற்றுகிழமை அன்று குஜராத் மாநிலத்தில் ஷாலோம் மிஷன் ஞாயிறு கொண்டாடினார்கள். நாங்களும் கிராம ஆலயத்தில் பங்குபெற தேவன் கிருபை தந்தார். நாங்கள் அங்கு பாடல்களை பாடி, சாட்சிகளை கூறிவிட்டு, தேவனுடைய வார்த்தையை அடியேன் பகிர்ந்து கொண்டபோது ஜனங்கள் தேவ ஆவியால் நிரப்பப்பட்டதையும், உற்சாகமாக பீலி பாடல்கள்ளைக் பாடி ஆராதனை செய்ததையும் என்னால் மறக்கமுடியவில்லை. மிகவும் அன்பான பாஸ்டர் அணில் கணவா அவர்கள் எங்களை வரவேற்று நல்ல உணவு கொடுத்தார். குறிப்பாக அவர்தான் ஷாலோம் ஊழியங்களின் முதல் சுதேச ஊழியர் மற்றும் முதல் கிராம ஆலயம் அவர் கிராமத்தில்தான் கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஷாலோம் மிஷன் ஞாயிறு அன்று விசுவாசிகள் அனைவரும் தியாகத்துடன் அந்த சபையில் மொத்தம் ரூ. 17,300/– படைத்தார்கள். ஷாலோம் சபைகள் கொடுக்கும் சபைகளாக விளங்குவதில் சந்தேகமில்லை. மேலும் போதகர் ஆமோஸ் அவர்கள் பீல் விசுவாசிகள் 100 பேருக்கு குஜராத்தி மொழியில் 100 பரிசுத்த வேதாகமங்களை வழங்கினார். விசுவாசிகள் சந்தோஷத்துடன் பெற்றுக் கொண்டு தேவனை மகிமைப்படுத்தினார்கள். 03.10.2040 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை ஷாலோம் அலுவலக ஊழியர்களுக்கென்று நடந்த ஜெபக்கூடுகையில் தேவனுடைய வார்த்தையை போதகர்கள் அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள். தமிழ் மற்றும் குஜராத் ஊழியர்கள் மிகவும் உற்சாகமடைந்து தங்கள் பொறுப்புகளை இன்னும் உண்மையாய் செய்ய தங்களை அர்ப்பணித்தார்கள். 04.10.2010 திங்கள் கிழமை குஜராத், ஜாலோத் பணித்தளத்தைக் காணவும் அங்கு நடைபெற்று வரும் மருத்துவப் பணிகளைக் காணவும் தேவன் கிருபை செய்தார். கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து வந்து மருத்துவராக பணிபுரியும் Dr. Sheju அவர்களின் அர்ப்பணிப்பைக் காணமுடிந்தது.

அதன்பின் இராஜஸ்தானிலுள்ள பிஜல்பூர் கிராமத்திலுள்ள ஷாலோம் பள்ளியையும், விடுதி பிள்ளைகளையும் காண தேவன் கிருபை செய்தார். அங்கு 1முதல் 7ம் வகுப்பு வரை பயின்று வரும் சுமார் 300 ஆதிவாசி பிள்ளைகள் மற்றும் விடுதியில் தங்கிப் பயிலும் 190 ஆதிவாசி பிள்ளைகளையும் கண்டு மகிழ்ந்தோம். சகோ. நாத்து டின்டோர் B.Ed., அவர்கள் குடும்பமாக அர்ப்பணித்து பள்ளி மற்றும் விடுதியை நடத்திவருகிறார்கள். மிக சொற்பமான உதவிகளைக்

கண்டு பாரம் பெற்றோம். அந்த சிறுவர்களுக்கு கழிவறை, குளியலறை துணி துவைப்பதற்கான வசதிகள் உடனடியாக தேவையென்பதை உணர்ந்தோம். சகோ. அல்பர்ட் அவர்களின் மனைவி ஆவியானவரால் ஏவப்பட்டு தன்னுடைய தங்க மோதிரம் மற்றும் காதில் அணிந்திருந்த வளையங்களைக் கழற்றி அவற்கை உடனடியாக கட்ட காணிக்கையாகத் தந்தார். மீதி ஆகும் செலவை நாங்கள் சபையாக பொறுப்பெடுக்கத் தீர்மானித்துள்ளோம். இன்னும் இங்கு விடுதியறைகள் மற்றும் ஆதிவாசி மாணவர்களுக்கு கட்டில்கள், பெட்டிகள் போன்றவை வழங்கப்படவேண்டும், இதற்காக ஜெபித்துத் தாங்க முன் வாருங்கள்.

அதன்பின்பு 20 கி.மீ தொலைவிலுள்ள கோய்க்கா கிராம ஆலயத்தில் சிறப்பு கூடுகையில் தேவ செய்தியை வழங்க தேவன் கிருபை செய்தார். போதகர் பாரியா அவர்கள் சிறப்பாக கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள். அவர்கள் தலைமையில் 30 பிள்ளைகளுக்காகன சிறிய விடுதி ஒன்று இயங்கி வருகிறது. கடந்த வருடத்தில் அவர்களுக்கு எங்கள் சபை மூலமாக ஒரு நல்ல அறை கட்டிக் கொடுக்க தேவன் உதவினார். எங்கள் சார்பில் ஆதிவாசி மாணவர்களுடன் ஒரு சிறப்பு விருந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. மகிழ்வுடன் மாணவர்களுடன் உணவருந்தினோம்.

மாலையில் ஷாலோம் பயிற்சி வளாகத்தில் புதிதாக ஊழியத்திற்கு அர்ப்பணித்துள்ள 22 பீல் சுதேச ஊழியர்களுக்கு செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார். 22 ஊழியர்களும் ஆவியில் நிறைந்து சொந்த பீல் மக்கள் இரட்சிக்கப்பட தங்களை ஒப்புக் கொடுத்தற்காக தேவனைத் துதிக்கிறேன். இதேபோல் இன்னும் 500 சுதேச ஊழியர்கள் எழுப்பப்பட உள்ளனர். சபையாக குடும்பமாக இவர்களை ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்.

மேலும் எங்கள் சபையின் சார்பில் நடந்து சென்று ஊழியம் செய்து வரும் சுதேச ஊழியர்களில் 7 பேருக்கு சைக்கிள்கள் வழங்க தேவன் கிருபை செய்தார். அதன்பின்பு 04.10.2010 அன்று அதிகாலை குஜராத், தாகோத் பணித்தளத்திலிருந்து புறப்பட்டு நவஜீவன் எக்ஸ்பிரஸ் ரயிலில் திரும்பி வர தேவன் கிருபை செய்தார்.

தேவன் தாமே எங்களுடைய பிரயாணங்களைப் பாதுகாத்து, ஊழியங்களை ஆசீர்வதித்து நடத்தியபடியால் தேவனைத் துதிக்கிறேன். ஷாலோம் ஊழியத்தில் அனைத்து அலுவலக ஊழியர்கள், சுதேச ஊழியர்கள் அனைவரின் அன்பு, அர்ப்பணிப்பு ஆகியவற்றிற்காக தேவனைத் துதிக்கிறேன். அன்பு சகோ. பிஷப் தேவதாஸ் அவரது மனைவி வஹிதா தேவதாஸ் அவர்கள் கொடுத்த பீல் ஆதிவாசி மக்கள் இரட்சிப்பின் தரிசனப் பணியின் படி, 7000 கிராமங்களில் சுவிஷேசம் அறிவிக்கப்படவும், சபைகளும், ஊழியர்களும் எழுப்பப்படவும், முழு பீல் மக்கள் நமது தலைமுறையில் இரட்சிக்கப்படவும் இதை வாசிக்கும் நீங்கள் யாவரும் ஜெபிக்கவும், மிஷனெரி பணிகளைத் தாங்கவும் முன்வர அன்புடன் அழைக்கிறேன்.

– ***Pr. ஆமோஸ்.*** ஏ.ஜி. சபை, மார்த்தாண்டம்

**சகோ. நாத்திலால் கராசியா ரோகன்யா மெக்ஜி – இராஜஸ்தான்**

ஊமையாக இருந்த எனத மகன் லாசரஸ் 24.09.2010 அன்று சபையில் நடைபெற்ற "ஷாலோம் அற்புதத்தின் நாள்" ஆராதனையில் அவனுக்காக ஜெபித்தோம். தற்போது கொஞ்சம் கொஞ்சமாக பேச ஆரம்பித்துள்ளான்.

**சகோ. கமலேஷ் பாரியா கொட்டாளியா – இராஜஸ்தான்**

வால்சிங் என்ற சகோதரர் காது கேட்காமல் கஷ்டப்பட்டு வந்தார். 24.09.2010 அன்று சபையில் நடைபெற்ற "ஷாலோம் அற்புதத்தின் நாள்" ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது கர்த்தர் அற்புதமாக சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. கள்ளு கராசியா சுரக்கனி – இராஜஸ்தான்**

காத்து என்ற சகோதரர் மனநிலை சரியில்லாமல் இருந்தார். 24.09.2010 அன்று சபையில் நடைபெற்ற "ஷாலோம் அற்புதத்தின் நாள்" ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது, தேவன் நல்லதொரு தெளிந்த புத்தியைக் கொடுத்தார்.

**சகோ. எத்தர்சிங் டாமோர் தாத்கட் – குஜராத்**

பிண்டு பேன் என்ற 38 வயது சகோதரி அநேக நாட்களாக உதிரப் போக்கினால் வேதனைப்பட்டு வந்தார்கள். அநேக மருத்துவங்கள் செய்தும் குணமாகவில்லை. 24.09.2010 அன்று சபையில் நடைபெற்ற "ஷாலோம் அற்புதத்தின் நாள்" ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. நவல்சிங் பில்வாள் காலியாவட் – குஜராத்**

காயா கிராமத்தைச் சேர்ந்த ஜடேயாபால் பலாஸ் என்ற சகோதரர் பாம்புக் கடியினால் பாதிக்கப்பட்டிருந்தார். ஆலயத்திற்கு அழைத்து வந்தார்கள். எண்ணெய் பூசி ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மசூர் கனவா கொலானா – குஜராத்**

கமலிபேன் டாமோர் என்ற 50வயதான சகோதரி ஒரு வருடமாக கேன்சர் வியாதியினால் அவதிப்பட்டு வந்தார்கள். அநேக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவம் செய்தும் பலனில்லை. மனமுடைந்து போன நிலையில் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் கேன்சர் வியாதியிலிருந்து அற்புத சுகத்தைக் கொடுத்தார்.


**சகோ. ஜகன் காமோன் வாங்கட் – குஜராத்**

ஜெட்லாபாய் கராடி என்ற சகோதரர் சுமார் மூன்று ஆண்டுகளாக டி.பி. வியாதியினால் துன்பப்பட்டு வந்தார். ரூ. 80,000/– க்கும் அதிகமாக செலவு செய்து மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இறுதியாக ஆலயத்திற்கு ஜெபிக்கும்படி வந்தார் ஆலயத்தில் இவருக்காக பாரத்துடன் ஜெபித்தோம் ஒரு வாரத்தில் தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. மால்சிங் மோடா பாண்டாகபூர் – மத்தியப்பிரதேசம்**

போட்லி கிராமத்தை சேர்ந்த பூராபாய் என்ற 45 வயதான சகோதரருக்கு கண்பார்வை மங்கிக் கொண்டிருந்தது. 24.09.2010 அன்று சபையில் நடைபெற்ற "ஷாலோம் அற்புதத்தின் நாள்" ஆராதனையில் கலந்து கொண்டு ஜெபித்தபோது, தேவன் அற்புதமாக நல்ல பார்வையை இந்த சகோதரருக்குக் கொடுத்தார்.

# ஆரிஜன்



மிஷனெரி முன்னோடிகள்

**ஆரிஜன்** ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர். இவர் அலெக்ஸாண்டிரியாவைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒரு நாள் மாலை வேளையில், உஷ்ணம் தணிந்த சூரியக் கதிர்கள் ஜன்னல்கள் வழியாக ஆரிஜன் இருந்த மேல் வீட்டு படுக்கை அறையினுள் பிரவேசித்தன. இந்த இளைஞனுக்கு அறையினுள் இருக்க முடியவில்லை. வெளியே வீதியில் இராணுவப் படையினர் நடமாடும் சப்தமும், ஆயுதங்கள் மோதும் ஓசையும் கேட்டன. தன் படுக்கையை விட்டெழுந்து ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தான் ஆரிஜன். போர்ச்சேகவர் தன் வீட்டிற்கு வருவதை கண்டு பயந்தான். போர்ச்சேவகத் தலைவன் ஆரிஜனுடைய தாயைக் கேட்டான்: உன் புருஷன் எங்கே? அப்படி கேட்கும் போது வணக்கம் கேப்டன் நான் ஏதாவது உமக்கு உதவி செய்யக் கூடுமா? என்று ஆரிஜனுடைய தந்தை கேட்டார். உடனே ஆரிஜனுக்கு பயம் நீங்கியது.

ஆனால், போர்ச்சேவகத் தலைவன் உம்மைக் கைது செய்ய வாரண்டு கொண்டு வந்திருக்கின்றேன் என்று கூறினார். "வேதப்புரட்சி செய்யும் கிறிஸ்தவக் குழுவைச் சேர்ந்தவரென்றும், முன்னோர்களின் கடவுளை வழிபட வேண்டாம் என்று பிரச்சாரம் செய்ததாகவும் உம் மேல் குற்றம்", அப்படியானால் நீங்கள் தேடுபவன் நான்தான் என்றார். இதைக் கேட்ட ஆரிஜன், தந்தை ஏன் தப்பித்து ஓட முயற்சிக்கவில்லை? ஏன் தகுந்த பதில் சொல்லி அவர்களை அனுப்பி விடவில்லை? என்று ஆச்சரியப்பட்டான்.

போர்ச்சேவகர் அவன் தந்தையை வாரினால் கட்டி வீட்டை விட்டு வெளியே இழுத்துக் கொண்டு போனார்கள். ஆரிஜனின் தாய் அடக்கக் கூடாமல் அழுதாள். இதைக் கண்ட இளைஞன் தன் தகப்பனுக்கு என்ன தண்டனை என்று கேட்டான். மரணதண்டனை என்று மறுமொழி வந்தது. என்ன? ஆண்டவராகிய இயேசுவை பின்பற்றுவதற்கு மரணதண்டனையா? பிஞ்சு மனத்தில் பதிய சில நிமிடங்கள் ஆயின. தானும் ஆண்டவருக்காக ஏன் மரிக்கக் கூடாது என்று எண்ணினான். அப்பா, அப்பா நானும் உம்முடனே ஆண்டவருக்காக மரிக்கிறேன் என்று கூப்பிட்டுக் கொண்டு ஓடி வந்தான், அதற்குள் போர்ச்சேவகர்கள் அவன் தந்தையை இழுத்துக் கொண்டு போய்விட்டார்கள்.

அலெக்சாண்டரியாவில் ஒரு சிறந்த வேத சாஸ்திர கல்லூரி இருந்தது. இது சுவிசேஷகனான பரி.மாற்கு நிறுவின கல்லூரி என்று கருதப்பட்டு வந்தது. கிறிஸ்தவர்களை துன்புறுத்திய காலம் முடிவடைந்தது, ஆரிஜன் பதினேழு வயது நிரம்பியவராய் இருக்கும்போது, அக்கல்லூரிக்குத் தலைமை ஆசிரியர் தேவையாயிருந்தது. பிஷப் டிமிட்ரியாஸ் ஆரிஜனை அப்பதவிக்கு நியமித்தார். வாலிபனாக இருந்த போதிலும் தமது பொறுப்பை உணர்ந்து திறம்பட

நடத்தினார். தமது தூய்மையான வாழ்க்கையினாலும், அறிவினாலும் மாணவர்களின் மனதினைக் கவர்ந்தார். நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, ஆரிஜன் அலெக்சாண்டிரியாவை விட்டு, பாலஸ்தீனா நாட்டிற்கு சென்று சில காலம் தங்கினார். மீண்டும் அலெக்சாண்டிரியாவிற்குத் திரும்பி வந்து, கிரேக்க தத்துவ சாஸ்திரங்களைக் கற்று வேத புரட்சியின் கொள்கைகளையும் அறிந்து, சத்திய வேதத்தின் மூலமாக அவர்களுக்கு அறிவைப் புகட்டினார். அவர் புகழ் நாடெங்கும் பரவிற்று, அறிஞர்கள் பலர் ஆரிஜன் வாயிலிருந்து வரும் ஒவ்வொரு வார்த்தைகளையும் தங்களது குறிப்பு புத்தகங்களில் பதித்து வைத்தனர்.

டிசியஸ் என்ற சா்க்கரவர்த்தி நாட்டைக் கைப்பற்றினான். அவன் கிறிஸ்தவர்களை வெறுத்து அவர்களைக் கொடூரமாக நடத்தினான். ஆரிஜனைச் சிறையிலடைத்து அவரைக் கிறிஸ்துவை மறுதலிக்கச் செய்ய வேண்டுமென்று பலவிதமாய் உபத்திரவப்படுத்தினான். ஒரு மேசையின் மேல் அவரைக் கிடத்தி, தலையின் பாகமும், காலின் பாகமும் உருளைகளைப் பொருத்தி, அவருடைய கை, கால்களை மாட்டி, அவ்வுருளைகளை மேல் புறமாக திருப்பி கால், கைகளை உடலிலிருந்து இழுத்து உபத்திரவப்படுத்தினான். அதன் மத்தியிலும் அவர் ஆண்டவரை மறுதலிக்கவில்லை. அதை பாக்கியமாகக் கருதினார். அதன்பின் டிசியஸ் சக்கரவர்த்தி மரித்தான். டிசியஸ்ற்குப் பின் வந்த சா்க்கரவர்த்தி, ஆரிஜினை விடுதலை செய்தான்.

சரீரத்தில் பட்ட பாடுகளினால் ஆரிஜனுடைய வாழ்நாட்கள் அதிகமாக நீடிக்கவில்லை. தூய்மையான வாழ்க்கை நடத்தி, எப்பொழுதும் ஆவியில் அனலுள்ளவராய் இருந்து, தமது 69வது வயதில் கி.பி. 254ல் ஆண்டவரிடம் தமதாவியை ஒப்புக் கொடுத்தார்.


# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **13.11.2010, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்) வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*செய்தியாளர் :* ***Rev. S.P. ராஜா*** (ஆறுதல் நற்செய்தி ஊழியம், விரிகோடு)

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும்,*
*தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு:– **சகோ. செல்வதுரை, Cell : 94876-89869,**
**சகோ. ஜார்ஜ், Cell : 98944-78405 சகோ. கிங்பெர்ட், Cell : 94868-64820**

காமன்வெல்த் போட்டியில் 101 பதக்கம் பெற்று இந்திய அணி பதக்கப் பட்டியலில் 2வது இடத்தை பிடித்தது. கடைசியில் நடைபெற்ற பாட்மின்டன் போட்டியில் செய்னா 38வது தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொடுத்தார். இந்தியா கடந்த முறை 2006ல் 4வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

---

நடப்பு நிதி ஆண்டின் ஏப்ரல் முதல் ஜீன் வரையிலான காலத்தில் இந்தியாவில் விற்பனையான மொபையல் போன்களின் எண்ணிக்கை சுமார் 3 கோடியே 86 இலசத்து 30 ஆயிரத்தைத் தொட்டது. ஒவ்வொரு காலாண்டிலும் 6.3 சதவீதம் அதிகமாக இந்த விற்பனை உயர்ந்து கொண்டிருப்பதாக, ஐ.டி.சி, இந்தியா அமைப்பு அறிவித்துள்ளது.

---

குழந்தைகள் டி.வி மற்றும் கம்ப்யூட்டர்களை அதிகம் பார்ப்பதினால் மன அழுத்தம் நோய் அதிகம் உண்டாகிறது என ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளதாக ஜர்னல் பீடியாட்ரிக்ஸ் தெரிவித்துள்ளது. இது குறித்து இங்கிலாந்தின் பிரஸ்டோல்ஸ் பல்கலை கழகத்தில் 1000 குழந்தைகளை தினமும் 2 மணிநேரம் டி.வி கம்ப்யூட்டர்களை பார்க்க செய்து ஆராய்ச்சி செய்ததில் இவர்களில் சிந்தனை மற்றும் யோசிக்கும் திறன் மற்ற மாணவர்களை காட்டிலும் குறைவாக காணப்பட்டது என கண்டுபிடிக்கப்பட்டது.

---

ஒரு காலத்தில் சாப்ட்வேர் ஜாம்பவானாக இருந்த மைக்ரோசாப்ட நிறுவனத்தின் புகழ இப்போது சரிந்து வருகிறது. கூகுள், ஆப்பிள் போன்ற நிறுவனங்களின் கடும் போட்டியே இதற்குக் காரணம்.

நன்றி : http://www.dinakaran.com


## எங்களுடன் தொடர்பு கொள்ள

<u>தலைமை அலுவலகம்</u>

**Sharing Love Mission**

168/5, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.`

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

<u>பணித்தள அலுவலகம்</u>

Rt. Rev. Dr. V. Devadass
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**



### கிராம ஆலயம்

# ஜுன்வானியா

### மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசம் மாநிலத்தில் மிகவும் உள்ளடங்கிய மலைப்பாங்கான, போக்கு வரத்து வசதி இல்லதா கிராமம்தான் சூன்வானியா –வாகும். சாராயம் காய்ச்சிக் குடித்து, வெறிப்பது இங்குள்ள மக்களின் பொழுது போக்காகும். மேலும் கொள்ளையிடுவதும், திருடுவதும் இவர்களது தொழிலாகும். இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஒரு முறை கூட கேள்விப்படாமல், இறந்தவர்களின் ஆவிகளையும், துர் தேவதைகளையும் வணங்கி வந்தவர்கள். உடல் நலம் சரியில்லாமல் போனால் மந்திரவாதிகளை நாடி மந்திரக் கிரியைகள் செய்வது இவர்களது வழக்கமாகும். இப்படிப்பட்ட சூழ்நிலையிலுள்ளவர்தான் சகோ. சுர்பாள்சிங் சங்காடா.

இவரது மனைவி வியாதியின் பிடியில் சிக்கி வேதனைப் பட்டு வந்தார். அநேக மந்திரவாதிகளை சந்தித்தும், மந்திரக் கிரியைகள் செய்தும் பலன் கிடைக்காமல் சுமார் ஒரு ஆண்டு காலமாக வேதனைப்பட்டதுடன், பல ஆயிரம் ரூபாய்களையும் செலவு செய்தார்கள், பலனில்லை. இந்த சூழ்நிலையில் சகோ. லூனா என்ற சுதேச ஊழியர் மூலம் இயேசு கிறிஸ்துவையும், அவருடைய அன்பையும் அறிந்து, தன்னை குடும்பமாக ஒப்புக் கொடுத்து ஜெபித்தார் சகோ. சுர்பாள்சிங் சங்காடா. அந்த நேரத்தில் ஒரு வருடமாக இவரது மனைவிக்கு இருந்த வியாதி உடனடியாக குணமானது. இந்த அற்புதத்தை பெற்ற இந்தக் குடும்பம் தங்களை முழுமையாக தேவனுக்கு அர்ப்பணித்து ஒரு வருடம் விசுவாசிகளாக இருந்தனர். அதன்பின் தேவன் சகோ. சுர்பாள்சிங் சங்காடா –வை ஊழியத்திற்கு அழைத்தார். அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து, தன்னை ஊழியத்திற்கு அர்ப்பணித்து நமது ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து அபிஷேகம் பெற்று, குறைந்த கால வேதாகம கல்வி பயின்று தனது கிராமத்தில், தனது வீட்டில் 2001ம் ஆண்டு ஊழியத்தை ஆரம்பித்தார். நாட்கள் செல்லச் செல்ல விசுவாசிகள் அதிகரித்ததனிமித்தமாக, தனது வீட்டில் தேவனை ஆராதிக்க இடம் இல்லாத காரணத்தினால், தனது சொந்த நிலத்தை தேவனுக்கென்று ஆலயம் கட்ட காணிக்கையாகத் தந்தார் அந்த இடத்தில் தேவநாமம் மகிமைப்படுமபடியாக ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டு Pr. ஆமோஸ், (A.G. சபை, மார்த்தாண்டம்) அவர்களால் பிரதிஷ்டை 02.10.2010 அன்று பிரதிஷ்டை செய்யப்பட்டது. தற்போது இந்த ஆலயத்தில் சுமார் 27க்கும் அதிகமான குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை ஆராதித்து வருகின்றனர்.

இந்த கிராம ஆலயம் மார்த்தாண்டம் சகோ. ஆல்பர்ட்ராஜ் அவர்கள் குடும்பத்தின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதி உதவியின் மூலம் மார்த்தாண்டம் A.G. சபையின் சார்பில் கட்டப்பட்டதாகும். தேவனுக்கே மகிமை!

**ரூ. 2 இலட்சம் அல்லது ரூ. 1 இலட்சம் அல்லது ரூ. 60 ஆயிரம் நிதி உதவி கொடுத்து ஆலயங்களைக் கட்ட முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month




Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press, 59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss